**Starting time 12.25P.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 85/2006**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 26.03.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பாப்பாத்தி (எ) கலா | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u> எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால், அவ்வளவாக தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால், 5-ஆம் வகுப்பு படித்துள்ளேன். நல்லமுத்துவின் நிலத்தில் ஒரே ஒரு கிணறுதான் இருந்தது என்றால், நான் வாங்கியபோது அது பாழடைந்துதான் இருந்தது. நாங்கள் அந்த கிணற்றை எப்போது தூற்றோம் என்றால், நாங்கள் வாங்கிய 3 மாதத்தில் தூற்றோம். அந்த கிணறு 2-ஆம் பிரதிவாதியின் வீட்டிற்கு கிழபுறத்தில் இருந்தது என்றால், ஆமாம். 2-ஆம் பிரதிவாதியின் வீட்டிலிருந்து கிணறு எவ்வளவு தூரத்தில் இருந்தது என்றால், 12 அடி தூரத்தில் இருந்தது.

2. 1991-ல் தெற்கில் நான் வாங்கிய வீட்டிற்கு மேற்கில் யார் இருக்கிறார்கள் என்றால், உதயராணி. ராஜேன்திரன் வீட்டிற்கும் நான் 1991-ல் வாங்கிய வீட்டிற்கும் பொது சுவர் இல்லை என்றால், ஆமாம். இரண்டு வீடுகளுக்கும் இடையில் கிழமேலாக தொடர்ச்சியாக சந்து செல்கிறது என்றால், ஆமாம். பொன்னம்மாள் நல்லுமுத்துவிற்கு

1940-ல் எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.3 பத்திரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

3. சிறுபூச்சி 1942-ல் நல்லமுத்து படையாட்சிக்கு எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.4 பத்திரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியும். வா.சா.ஆ.3 மற்றும் 4ல் கண்டுள்ள சொத்துக்களை தான் நான் கிரயம் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால், ஆமாம். புல எண். 413/15-ல் 72 செண்டில் ஒரு பகுதியை தான் நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால், நான் நல்லமுத்து படையாட்சியின் வாரிசுகளிடமிருந்து 1345 சதுரடி நிலம் வாங்கினேன்.

4. வா.சா.ஆ.1 ஆவணத்தை காட்டி அது தான் என்னுடைய கிரய ஆவணமா என்றால், ஆமாம். அதில் மூன்று இன சொத்துக்களாக வாங்கியுள்ளேன் என்றால், ஆமம். அதில் முதல் இன சொத்தாககிழமேல் 28-1/2 அடி தென்வடல் 30 அடி கிரயம் பெற்றுள்ளேன் என்றால், ஆமாம். 2-வது இன சொத்தாக கிழமேல் 11 அடி தென்வடல் 17 அடி கிரயம் பெற்றுள்ளேன் என்றால், ஆமாம். 3-வது இன சொத்தாக கிழமேல் 7 அடி தென்வடல் 30 அடி கிரயம் பெற்றுள்ளேன் என்றால், ஆமாம். வா.சா.ஆ.1-ல் 2-வது இன செர்த்தில் தான் கிணறு இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம்.

5. வா.சா.ஆ.1-ல் நான் 1252 சதுரடி கிரயம் பெற்றுள்ளேன் என்றால், ஆமாம். வா.சா.ஆ.1-ல் கண்டுள்ள சொத்திற்காக தான் வழக்கு போட்டுள்ளேன் என்றால், ஆமாம். ஆனால் வழக்கு சொத்து விவரத்தில் 1395 சதுரடி குறிப்பிட்டுள்ளேன் என்றால், ஆமாம். நான் குறிப்பிட்டுள்ள விஸ்தீரணம் தவறானது என்றால், அவர்கள் அனுபவித்து வந்த சொத்தை தான் நான் கிரயம் வாங்கினேன். சந்திற்கு தென்புறத்தில் வாங்கிய சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால், இரண்டு சொத்துக்களுக்கும் இடையில் இணைப்பு பகுதி உள்ளது.

6. சந்துக்கு தென்புறத்தில் உள்ள சொத்தை அய்யம்மாள் மற்றும் ராமநாதன் (எ) பூபாலனிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால், ஆமாம். மேற்படி சொத்தின்

செக்குபந்தி விவரம் சந்திற்கு கிழக்கு வடக்கு, நல்லமுத்து காலி மனைக்கும் தெற்கு, மேற்கு என்றால், சரிதான். 2-வது இன சொத்தின் செக்குபந்தி விவரம் ஜோசப் வீட்டிற்கும் கிழக்கு, கருப்பாயி அம்மாள் வீட்டிற்கும் மேற்கு, ரோட்டிறகும் வடக்கு, பொது தடத்திற்கும் தெற்கு என்றால், சரிதான். அதில் பொது தடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது சந்து தான் என்றால், ஆமாம். கருப்பாயி அம்மாள் வீட்டிற்கு கிழக்கில் யார் இருக்கிறார்கள் என்றால், சரோஜா மற்றும்ஆறுமுகம்.

7. நீதிமன்றத்திலிருந்து ஆணையரை அழைத்து சென்று அளந்தோம் என்றால், ஆமாம். ஆணையர் சொத்தை முழுமையாக அளந்து அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால், அளக்க முடியவில்லை என்று கூறிவிட்டார், ஏன் என்றால், பட்டா இல்லாததால் அளக்க முடியாது என்று கூறிவிட்டார். 1940-ல் நல்லமுத்து படையாட்சி கிரயம் பெறும் போதே புல எண் உட்பிரிவு செய்யப்பட்டு விட்டது என்றால், சாட்சி பதில் சொல்லவில்லை. பட்டா இல்லாததால் அளவீடு செய்ய இயலவில்லை என்று கிராம நிர்வாக அதிகாரியோ, நீதிமன்ற ஆணையரோ அறிக்கை கொடுத்தார்களா என்றால், கொடுத்தார்கள்.

8. அந்த அறிக்கையை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டால் எனக்கு விரோதமாகிவிடும் என்பதால் தான் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. இவ்வழக்கு சொத்தின் அளவுகளையே தவறானபடி காட்டி வழக்கு தாக்கல் செய்திருப்பதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. நான் கிரயம் பெற்ற 1252 சசதுரக்கு வழக்கு போடாமல் 1395 சதுரடிக்கு வழக்கு போட்டுள்ளது தவறு என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 12.46 A.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.